பக்கத்துக்கு விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

வெள்ளி 19 கார்த்திகை 12 ஜும்ஆ ஜு 16 இதழ் 288
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28-11-77

## லாலா தயாரிப்பு

புதிய முறையில் லாலா தயாரிக்கப்பட்டு இலங்கை முழுவதிலும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.. லாலா சோப்பை வாங்கி உபயோகித்து அதன் தரத்தை தெரிந்து கொள்ளுங்கள்.

லாலா சோப்தொழிற்சாலை
— அச்சுவேலி —

# 'இனஒற்றுமைக்கு இருமொழித் திட்டம்'

## — அமைச்சர் மொகமட்

(அக்கரைப்பற்று)

இத்தநாட்டில் நிரந்தரமான தேசிய ஒற்றுமை ஏற்படவேண்டுமாயின், சிங்களமக்கள் தமிழ் மொழியையும், தமிழ் மக்கள் சிங்கள மொழியையும் கற்க வேண்டும் என்று போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். மொகமட் இன்று இங்கு தெரிவித்தார்.

அக்கரைப்பற்றுக்கு இன்று விஜயம்செய்த போக்குவரத்து அமைச்சர், புதிய பஸ் டிப்போ ஒன்றும் புகையிரத டிக்கட் விநியோக நிலையம் ஒன்றும் விரைவில் இங்கு ஆரம்பித்து வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தேசிய ஒற்றுமையின் மூலமே நாட்டில் பொருளாதார சுபிட்சத்தை அடையலாம். என்று கூறிய அமைச்சர், பிரதமர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா

(6-ம்பக்கம் பார்க்க)

# இலவச அரிசி ரத்துத்திட்டம்

# ஜனவரி 2-ம்திகதி முதல் அமுல்

## பங்கீட்டு அட்டைகள் வாபஸ் பெறப்பட மாட்டாது!

### (கொழும்பு)

இலவச அரிசி வெட்டுச் சம்பந்தமாக நிதியமைச்சர் திரு. ஜெயரி டி மெல் தெரிவித்த 'பட்ஜட்' யோசனை, ஜனவரி மாதம் இரண்டாந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

இலவச அரிசியை வழங்குவது அல்லது ரத்துச்செய்வது சம்பந்தமான வேலைகள் அடுத்த மாதம் ஆரம்பமாகுமென்று, இன்று இங்கு நடைபெற்ற மாநாடு ஒன்றில் உணவுக் கமிஷனர் தெரிவித்தார்.

பங்கீட்டரிசிப் புத்தகங்களை ரத்துச்செய்யும் அல்லது புதுப்பிக்கும் முதற்கட்ட வேலைகள் டிசம்பர் மாதம் 10ந் தேதி ஆரம்பமாகி 23ந் தேதி முடிவடையும். மாவட்ட அடிப்படையில் நடைபெறும் இவ் வேலையின் முதல் பகுதியாக அடுத்த மாதம் 10ந் திகதி ஒவ்வொரு வீட்டுக்கும் படிவங்கள் விநியோகிக்கப்படும். 12, 13ந் தேதிகளில் இப்படிவங்கள் சேகரிக்கப்படும். பின்னர் 17, 18, 19ந் திகதிகளில் பங்கிட்டுப் புத்தகங்கள் விநியோகம் நடைபெறும். புதிய பங்கீட்டு விநியோக முறை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 2ந் திகதி அமுலுக்கு வரும்.

நிதியமைச்சர் தெரிவித்த யோசனைக்கிணங்க வழங்கப்படவிருக்கும் புதிய பங்கீட்டரிசிப் புத்தகங்களில் இலவச அரிசி வழங்கும் கூப்பன் புத்தகங்களில் ஒரு இணைப்பு ('பிகார்ட்') புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கும். இது இல்லாத பங்கீட்டரிசிப் புத்தகங்களுக்கு இலவச அரிசி வழங்கப்படமாட்டாது.

குறிப்பிட்ட ஒரு சாராரின் இலவச அரிசி வெட்டப்பட்ட போதிலும், இவர்களின் பங்கீட்டு அட்டைகள் வாபஸ் பெறப்படமாட்டாது.

நிலைமை இப்படி இருந்த போதிலும், அடுத்த மாதம் 12, 19, 26ம் திகதிகளில் வழக்கம்போல பங்கீட்டரிசிவிநியோகிக்கப்படும். புதிய திட்டம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 2ம் திகதி முதல் அமுலுக்கு வரும்.

## எகிப்திய அதிபரைக் கண்டித்து மாநாடு!

செய்ரோ, நவ. 27

மத்திய கிழக்கு நெருக்கடியைத் தணிக்கும் வகையில் அரபுநாடுகள் மகாநாடொன்றைக் செய்ரோவில் கூட்ட எகிப்து அதிபர் அன்வர்சதாத் முயற்சிக்கும் / அதே நேரத்தில் இதற்கு எதிராக லிபியாவில் அரபு நாடுகள் மாநாடொன்றைக் கூட்ட சில அரபுநாடுகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

அதிபர் அன்வர் சதாத் இஸ்ரேலுக்கு விஜயம் செய்ததைக் கண்டித்தும், சதாத்தின் தற்போதைய போக்குக்கு ஆட்சேபம் தெரிவித்தும் லிபியாவில் நடைபெறும் மகாநாட்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆந்திரா அமைச்சர் ராஜினமா!

புதுடில்லி, நவ. 27

ஆந்திரப் பிரதேசக் கல்வியமைச்சர் இன்று ராஜினமாச் செய்திருக்கும் அதே நேரத்தில், மத்தியப்பிரதேசமுதலமைச்சர் கைலாஷ் ஜோஷி, தாமும் ராஜினமாச்செய்ய விரும்புவதாக அறிவித்துள்ளார்.

ஆந்திரப் பிரதேசக் கல்வி அமைச்சரின் திடீர் ராஜினமாவுக்குச் சரியான காரணம் என்ன என்பது அறிவிக்கப்படாத போதிலும், அண்மையில் ஏற்பட்ட புயலுக்குத் தமது கிராமத்தில் உறவினர்களும் நண்பர்களும் பலியாகியிருப்பதன் கவலை காரணமாகவே தாம் ராஜினமாச் செய்வதாக ஆந்திரா கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார். மத்திய பிரதேச முதலமைச்சர் உடல்நிலை காரணமாகவே தாம் ராஜினமாச் செய்ய விரும்புவதாக அறிவித்துள்ளார்.

## "ஆந்திரா அரசு மீது நம்பிக்கை இல்லை"

புதுடில்லி, நவ. 27

ஆந்திரப் பிரதேசத்தில் புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட ஜனதா [பாராளுமன்ற] கமிட்டி இன்று இங்குவெளியிட்ட கூட்டறிக்கையில், ஆந்திரா மக்களின் நம்பிக்கையை மாநிலஅரசு இழந்து விட்டதென்று தெரிவித்துள்ளது.

இக் கமிட்டியில், லோகசபை அங்கத்தவர் திரு குமரி அனந்தன் உட்பட நால்வர்உள்ளனர். இவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில்; ஆந்திரப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட பகுதி மக்களைச் சந்தித்தபோது மாநில அரசு மீது அவநம்பிக்கையே தெரிவித்தனர் என்றும், நிவாரணப்பணிகளுக்காக ஒதுக்கப்படும் பல லட்ச ரூபாவும் பாதிக்கப்பட்ட மக்களைப் போய்ச் சேருமா என்று சந்தேகமே என்றும், நிவாரணப்பணிகளை மாநில அரசு சரிவரச் செய்யவில்லையென்றும், இறந்தோரின் எண்ணிக்கையை மிகவும் குறைத்தே மாநில அரசு வெளியிட்டுள்ளது என்றும் இறந்தவர்களின் தொகை மிகவும் கூடுதலாக இருக்குமென்றும் தெரிவித்துள்ளனர்.

## கிளிநொச்சிப் பகுதி குளங்கள் வழிகின்றன!

### (விஷேமடு)

கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் குளங்கள் யாவும் நிரம்பி வழிகின்றன.

இரணைமடுக்குளம், கனகாம்பிகைக்குளம், அக்கராயன் குளம், விஸ்மடுக்குளம், பெரிய குளம் ஆகியவற்றில் நீர் மட்டம் உயர்ந்து கலிங்கு பாய்கிறது.

இரணைமடுக்குளத்தில் அசுர வேகத்தில் நிரம்பும் நீரைக் கலிங்கு மூலம் வெளியேற்ற முடியாதிருப்பதால், அதன் நீர் விநியோகத் துருகளும் திறந்து நீரை வெளியேற்ற வேண்டிய கட்டாயமேற்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி நிறை வேற்றுப் பொறியியலாளர் தெரிவித்தார்.

விதைத்த நெல் வெள்ளத்தினால் அள்ளிச் செல்லப்படலாமென விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

போக்குவரத்துத் துண்டிக்கப்படலாமென்ற அச்சத்தினால் கூட்டுறவுச் சங்கங்களும் தனியார் கடைகளும் இரண்டு வாரத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களைக் கையிருப்பில் வைத்துள்ளன.

(க-அ)

## ஆஸி பிரதமர் 50,000 டொலர் உதவி

புதுடில்லி, நவ. 27

தமிழ்நாடு, ஆந்திர மாநில புயல் அழிவு குறித்து தகவல் சேகரிக்கவும், மருந்துகளைச் சப்ளை செய்யவும் மத்தியில் இருந்து ஒரு விசேடகுழு சென்றுள்ளது.

இரவு பகலாக இக்குழு செயற்படும்.

ஆந்திராவுக்கு 20 லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

அவுஸ்திரேலியா பிரதமர் புயல் வெள்ளநிவாரணநிதிக்கு 50,000 டொலர் உதவியளிக்க வுள்ளார்.

(உ)

ஆசிரியர் நியமனங்கள்

## கூட்டணி சிபார்சு கோரப்பட வில்லை!

### பண்டிதர் கா. பொ.

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டு நியமிக்கப் படவிருக்கும் ஆசிரியநியமனங்களுக்கு சிபார்சு செய்யும்படி இதுவரை எந்தவித அறிவித்தல்களையும், அரசாங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் அனுப்பிவைக்கவில்லை என்று காவலூர் தேசியப் பேரவை உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: 'நாட்டில் உள்ள சில விஷமிகள் திட்டமிட்டு செய்துவரும் பொய்ப் பிரசாரங்களினால், எனது தொகுதி மக்கள் பணத்தையும், நேரத்தையும் வீணாக்கி, என்னைச் சந்திக்கவருவதையிட்டு நான் மிகவும் அனுதாபப்படுகின்றேன்.

'அரசாங்கம் இவ்வாறு அப்படியொரு சிபார்சுக் கடிதத்தை அனுப்பியிருப்பதாக, சென்ற

[6-ம் பக்கம் பார்க்க]

## வரிவிளம்பரம்

### பயிற்சி

இளைஞர்களுக்கு மூன்றுமாத கால பொது விவசாயப் பயிற்சி. நற்சாட்சிப் பத்திரம், சான்றிதழ்களுடன். உடனடியாக நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர், விவசாய நிலவனம் மருகனுமடம். (இனுவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்) 7771

### தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒருமாத காலமாக முத்திரை அச்சிட்ட என்வலப்பிற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் முத்திரை புறம்பாகவும், என்வலப் புறப்பாகவும் வாங்கவேண்டியிருப்பதாக மக்கள் குறைபடுகிறார்கள். (க-அ)

டாக்டர்

செ. விவேகானந்தராஜா

மறைவு: 9-12-76

'ஓராண்டு காலம் சென்றாலும் எம் உள்ளம் விட்டு ஒருபொழுதும் அகலவில்லை'

அன்புடன் நினைவுகூரும்

மனைவி, மகன்,

மகேஸ்வரி, பபா,

7776

## யாழ் லயன்ஸ் கழகம்

### நத்தார் — புதுவருட வாழ்த்து சித்திரப் போட்டி

நிபந்தனைகள்

வாழ்த்து மடலின் அளவு: 3½×5½ (மடிக்கப்பட்டது)

கடதாசி: தடித்த வெள்ளை போட் அல்லது ட்ரோயிங் பேப்பர் வர்ணம் தீட்டுவதற்கு வாட்டர் கலர், கிறேயன், பெயிண்டிங் ஸ்டிக்ஸ் ஆகியன பாவிக்கலாம்.

பிரவேசக் கட்டணம் ரூபா 1/-

முடிவு திகதி 15-12-77

இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் ஒரு ரூபா காசுக் கட்டளையுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

காரியதரிசி, யாழ். லயன்ஸ்கழகம்

சிலோன் மேர்ச்சன்ல், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழ: இல/M B/12218

1. கந்தையா நடராசா திலகரத்தினம் (காலஞ்சென்றவர்)
2. பெண் இந்திராவும் இருவரும் மாதகல், பண்டத்தரிப்பு. வழக்காளிகள்

எதிராக

1. சுப்பிரமணியம் கனகசபை கைம்பெண் நாகம்மா தனக்காகவும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-சுப்பிரமணியம் கனகசபையின் தத்துவகாரியாகவும் 478/5, கனகசபை அவென்யூ, வண்ணார்பண்ணை கிழக்கு.
2. வைத்திலிங்கம் ஆனந்தநடராசாவும்
3. பெண் கமலாவதியும், 478/5, கனகசபை அவென்யூ, வண்ணார்பண்ணை கிழக்கு.
4. பாலகங்காதரனின் மகள் புனிதவதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B/12218-ம் இலக்க வழக்கில் எனக்குக் கொடுபட்ட கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் 3 காணிகளில் 1-ம் துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 42600/-ம் 6-1-71 தொடக்கம் 13-7-72 வரை ரூபா 30000/-க்கும் 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 1095/65 சதமும் இதிலிருந்து 11-7-73ல் 2-ம் காணி விற்கப்பட்டதால் பெறப்பட்ட ரூபா 16070/-ம் அத்திகதியிலிருந்து அதற்குரிய 5 வீத வட்டியும், 15-9-75ல் 3-ம் காணி விற்கப்பட்டதால் பெறப்பட்ட ரூபா 6010/-ம் அத்திகதியிலிருந்து அதற்குரிய 5 வீத வட்டியும் கழிக்கப்படும்.

### ஆதனவிபரம்

1-ம் காணி — வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை ''கரப்பன்தறை'' . வரகுச் செய்கை நிலப்பரப்பு 2-ம் 14 குளியும் (V C) இதில் பிரிவிடுதல் பெற்ற 1¼ பரப்பு (V C) தெற்குப்பக்கமாக விற்கப்பட்டது. மிச்சமாக இருக்கும் 1 பரப்பும் 9 1/2 குளியும் அதிலிருக்கும் கல்விடும் குசினியும் கிணறும் பயிர்களும் எல்லே கிழக்கு: கை ஒழுங்கை வடக்கும் மேற்கும் ஒழுங்கை, தெற்கு சோமசுந்தரம் சுப்பிரமணியத்தின் ஆதனம். பதிவு D310/14ல். காணிகள் 2ம் 3ம் விற்கப்பட்டன.

க. சரவணமுத்து

கொமிஷனரும்

விசேடதிப்பாளரும்

38/1, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டிக்குளி, 31-10-77. 7777

1973-ம் ஆண்டு நீதிநிருவாக 44-ம் இலக்கச் சட்டம் 283-ம் பிரிவின் கீழ் மரணசாதனம் நிரூபிக்கப்பட்டு மரணசாதன அதிகாரப்பத்திரம் கொடுக்க வெளிப்படுத்தும்

## இடைக்காலக் கட்டளை

### இலங்கைக் குடியரசின் பங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

சங்காணை மேற்கு காலஞ்சென்ற கனகசபை கந்தையாவின் மரணசாதனம் சம்பந்தமானது.

கனகசபை கந்தையா கைம்பெண் தங்கரத்தினம், சங்காணை மேற்கு விண்ணப்பகாரி

வலயம்: யாழ்ப்பாணம்

இல. 407

எதிர்

1. கந்தையா சபாநடேசன்
2. கந்தையா நிர்மலானந்தன்
3. கந்தையா மகள் திலகவதி
4. கந்தையா மகள் சுகிர்தவதி
5. கந்தையா மகள் கலாவதி
6. கந்தையா விங்கேஸ்வரன்
7. கந்தையா மகள் தேவதேவி
8. கந்தையா மகள் வரதலட்சுமி எல்லோரும் சங்காணை மேற்கு பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் வலயத்து மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்கும் அதிகாரி க. கணபதிப்பிள்ளையாகிய நான் எனக்களிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்படி 1977-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11-ந் திகதி 280-ம் பிரிவின் கீழான விண்ணப்பத்தின் கூற்றுக்கள் பரீட்சை மாத்திரத்தில் சரியெனத் திருப்தியடைந்தமையால் இக் கட்டளை சேர்ப்பிக்கப்படும் நபர் எவரோ அல்லது மேற்படி ஆஸ்தியில் அக்கறையுடையவராகத் தோன்றும் வேறு நபர்களோ 1977-ம் ஆண்டு மார்கழி மாதம் 28-ந் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ எதிர்க்காரணம் காட்டினாலன்றி,

(அ) 1977-5-10-ந் திகதி ஐந்து சாட்சிகளுக்கு முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட மரணசாதனத்தின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்பட்டு இக்காரியாலயத்தில் வைப்பிலுள்ளது நிரூபிக்கப்பட்டதென்றும் அச்சாதனத்தில் குறிக்கப்பட்டுள்ள நிறைவேற்றுனர் மேற்படி விண்ணப்பகாரியெனவும் அதன்பிரகாரம் மரணசாதன அதிகாரப் பத்திரம்/மரணசாதனம் அணைத்த நிர்வாகப்பத்திரம் விண்ணப்பகாரிக்கு வழங்கப்படுமென்றும்,

(ஆ) இந் நடவடிக்கையின் நோக்குக்காக பிராயமற்ற 3ல் இருந்து 8 வரையான பிரதிவாதிகளின் பராமரிப்புக் காரணத 1-ம் பிரதிவாதி நியமனம் செய்யப்பட்டுள்ளாரெனவும் இத்தால் கட்டளையிடுகிறேன்.

ஒப்பம்

க. கணபதிப்பிள்ளை,

மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்கும் அதிகாரி.

1977-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11-ந் திகதி. 7752

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# "தேர்தல் வாக்குறுதிகளை அரசு மீறுகிறது"

(ஹட்டன்)

"அரசு பெருந்தொகைப் பணத்தைக் கடன்பெறும் பொருட்டு உலக வங்கியும் சர்வதேச நாணய சபையும் விதித்த நிபந்தனைகளை ஏற்று தொழிலாள, நடுத்தரவகுப்பினர்மீது பெரும் சுமைகளை ஏற்றமுற்படுவது, தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறுவதாகும்."

இவ்வாறு புதிய செங்கொடிச் சங்கச்செயலாளர் திரு கே. சுப்பையா, வரவு-செலவுத் திட்டத்தையொட்டி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிட்டிருப்பதுபோன்று மூன்றாறு ரூபாவுக்குமேல் வருமானம் பெறும் குடும்பங்களுக்குப்பங்கு பங்கீட்டு உணவுப்பொருட்களை ரத்துச்செய்யும் திட்டத்தினால் பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்களே மிகக் கடுமையாகப் பாதிக்கப்படப் போகின்றார்கள். இந்தாட்டின் அந்நியச் செலாவணியில் பெரும் பகுதியை தேடிக் கொடுக்கும் தோட்டத்தொழிலாளர்கள் தமது சொற்ப வருமானத்தையும் மலையக நகரங்களிலுள்ள முதலாளிகளுக்கு மேலும் தாரைவார்க்கவேண்டிய தர்ப்பாக்கிய நிலைமை தோன்றும்."

# "அல்லாவின் வழியில் நல்வாழ்வு பெறுவோம்"

(யாழ்ப்பாணம்)

"மனித இனத்துக்கு நன்மைகளைப் போதிக்கவும், தீமையை விலக்கவும் அல்லாவால் படைக்கப்பட்டுள்ளநாம் மனித இனத்துக்கு முன்மாதிரியாகவும், நடுநிலையுள்ள சமூகமாகவும் வாழவேண்டும்."

இஸ்லாமிய மார்க்க அறிஞர்களான உலமாக்கள் கூட்டம் ஒன்றுக்குதலைமைதாங்கி உரை நிகழ்த்திய அகில இலங்கை கதீப்மார்களின் மத்திய சம்மேளனத் தலைவரும், இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாக அரபு இஸ்லாமிய நாகரீகத்துறை விரிவுரையாளருமான மௌலவி கே. எம். எச். காலிதின் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தமதுரை யில் பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்வும் போதனைகளும் எம்மை உயர் நிலைக்குக் கொண்டுசென்றன என்றார்.

யாழ். மீராணியாக் கல்லூரியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மௌலவி ஓ எம். அப்துல் ரஸ்லாக் கிராஅத் ஓதி ஆரம்பித்து வைத்தார். அகில இலங்கை ஜம் இய்யதில் உலமா சபையின் பிரச்சாரக் குழுச் செயலாளரும்: அறபு வித்தியாதரிசியுமான மௌலவி எம். ஜே. எம் ரியாத், மௌலவி எம். எச் எம். இபுறாஹிம், மௌலவி எம். ஜி. எம். ஹனிபா உட்பட மற்றும் பலரும் இக்கூட்டத்தில்உரை நிகழ்த்தினர். (கா-உ)

# விறகு தேவையானால் பதிவு செய்யுங்கள்

[யாழ்ப்பாணம்]

அரசாங்க மரக்கூட்டுத் தாபனத்தில் பெயர்களைப் பதிவுசெய்தவர்களுக்கே விறகு வழங்கப்பட்டுவருகிறது.

யாழ்ப்பாணத்தில் பலத்த விறகு தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை 640 பேர், தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துள்ளார்கள்.

தினமும் பாவனையாளர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துவருகின்றனர். (க.அ)

"கலவரத்தில் பாதிக்கப்பட்ட

# இந்துசமய குருமாருக்கு நிவாரணம் வழங்குக"

[யாழ்ப்பாணம்]

"ஆகஸ்ட் மாதக் கலவரத்தினால் நாட்டின் பல்வேறு இடங்களிலும், பாதிக்கப்பட்ட இந்துசமயக் குருமார்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்கவேண்டும்"

யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற வொனந்த குருகுல பரிபாலன சபையின் மூன்றாவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

திரு. பேரம்பல செட்டியார் சுப்பிரமணியத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில், குருகுலக் கட்டடத்தை ஏப்ரல் மாதத்திற்கு முன் பூர்த்தியாக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சபையின் புதிய நிர்வாகிகள் தெரிவில் தலைவர் தெரிவு பின்போடப்பட்டு மற்றும் உத்தியோகத்தர்கள் தெரிவு இடம்பெற்றது.

விபரம் வருமாறு:

உபதலைவர்கள்: வெஎஸ்ரீ ஐ. வைத்தியநாதக் குருக்கள், வெஎஸ்ரீ தா. சோதிநாதக் குருக்கள், சிவஸ்ரீ தா. சோமசுந்தரக் குருக்கள், பிரமஸ்ரீ சபஞ்சாட்சரசர்மா, பிரமஸ்ரீ ப.சுப்பிரமணியஐயர், செயலாளர் பிரம்மஸ்ரீ ப. வித்தியானந்தசர்மா, உபசெயலாளர்: பிரம்மஸ்ரீ வா. முத்துக்குமாரசாமி சர்மா, தலைகாரி: பிரம்மஸ்ரீ சோ. வரதராசசர்மா.

கமிட்டி உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(க. அ)

## வெற்றுச் சாக்கு விற்பனைக்கான கேள்வி விண்ணப்பப் பத்திரம்

கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கத்தில் விற்பனைக்குள்ள 6000 வெற்றுச் சாக்குகளையும் விற்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன், என விலாசமிடப்பட்டு, கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்கு விற்பனை'' என எழுதப்பட்டு, 10-12-77 நண்பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஒப்பம்)

தலைவர்

பொதுமுகாமையாளர்.

கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் பரந்தன்

7715

## சதாத்தின் கெய்ரோ மாநாடு:

# இஸ்ரேல் கலந்து கொள்ளும் பிரதமர் பெகின் அறிவிப்பு

லண்டன், நவ. 27

எகிப்திய அதிபர் அன்வர் சதாத் மத்தியகிழக்குப் பிரச்னை தொடர்பாக கூட்டவுள்ள கெய்ரோ மாநாட்டில் இஸ்ரேல் கலந்துகொள்ளத் தயார் என்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் கடந்த இரவு அறிவித்தார்.

எனினும் பலஸ்தீன இராஜ்யம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றகோரிக்கையை இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று பிரதமர் பெகின் கூறியிருக்கிறார்.

தமது கெய்ரோ மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அன்வர் சதாத், அமெரிக்கா, சோவியத்யூனியன் உட்பட சகல அரபுநாடுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இம் மாநாட்டின் பொருட்டு செயற்குழு ஒன்று அமைக்கப் பட்டிருப்பதாக எகிப்திய பதில் வெளிவிவகார அமைச்சர் காலித் தெரிவித்தார்.

இம் மாநாட்டில் கலந்து கொள்வது பற்றி ஏனைய நாடுகளுடன் அமெரிக்கா ஆலோசித்துவருவதாக அறிவிக்கப் படுகிறது.

மாநாட்டில் கலந்துகொள்வது பற்றி மாஸ்கோ எதுவும் தெரிவிக்கவில்லை.

மத்தியகிழக்குப் பிரச்னை தொடர்பாக எகிப்துடன் எந்தவித பேச்சுவார்த்தையையும் தாம் வைத்துக்கொள்ளப்போவதில்லை என்று சிரியா அறிவித்துள்ளது.

கெய்ரோ மாநாட்டு அழைப்பை பலஸ்தீன விடுதலை இயக்கம் நிராகரித்துள்ளது. இதேவேளை தமது ஜெருசலேம் விஜயத்தினால் எட்டு ஆக்க பூர்வ விளைவுகள் ஏற்பட்டுள்ளன என்று எகிப்திய அதிபர் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார். (உ)

## இதயம் குழறும் கோரக் காட்சிகள்!

சென்னை, நவ. 27

**ஆந்திரப்பிரதேசத்தில் புயலின் கோரப் பசிக்கு இரை யாகிவிட்ட கடலோரப்பகுதிகளில் இதறுண்டு கிடக்கும் பல நூற்றுக் கணக்கான சடலங்கள் இப்பொழுது ஆங்காங்கே ஒருசேரக் குவிக்கப்பட்டு, தகனம்செய்யப்பட்டு வருகின்றன! சடலங்களை அப்புறப்படுத்தாவிட்டால், காலரா போன்ற கொள்ளைநோய் உண்டாகலாம் என்று அஞ்சப்படுவதாலேயே சடலங்கள் மீது பெட்ரோல் ஊற்றப்பட்டு தகனம்செய்யப்படுகின்றன!**

தமிழ்நாட்டில் புயல், வெள்ளத்தினால்பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழை, தென்னை மரங்கள் முற்றாக அழிந்து விட்ட பாதிக்கப்பட்ட பகுதிகளில் 3 லட்சத்து 72 ஆயிரத்து 139 வீடுகள் அழிந்துவிட்டன. திருநெல்வேலியில் சேதமுற்ற விதைகளைச் செப்பனிட ஒரு கோடியே மூன்று லட்சம் ரூபா தேவைப்படுகிறது. கோயம்புத்தூரில் ஐம்பது நாட்களாகத்தொடர்ந்து மழைபெய்துகொண்டிருக்கிறது!

## "கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஆளும் கட்சி இணையாது"

### போர்த்துக்கல் பிரதமர் அறிவிப்பு

லண்டன், நவ. 27

போர்த்துக்கல்லின் ஆளும் சோஷலிஸ்ட்கட்சிகம்யூனிஸ்ட் கட்சியுடன் இணையமாட்டாது என்று போர்த்துக்கல் பிரதம மந்திரி திரு. சுவாரஸ் அறிவித்துள்ளார்.

அரசின் தேசியதிட்டத்திற்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு அளிக்காவிடின் தமது அரசு ராஜினாமாச் செய்துவிட வேண்டிய நிலை கூட உருவாகலாம் என்றும் திரு. சுவாரஸ் தெரிவித்தார். (உ)

## "பேரழிவு ஏற்பட்டுள்ளது!"

### ஆந்திரா, தமிழ்நாடு புயல்பாதிப்பு கண்டு இந்திய ராஷ்டிரபதி வருத்தம்

சென்னை, நவ. 27

தமிழ்நாட்டில் புயல்காற்றினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானம் மூலமாகப் பார்வையிட்ட இந்திய ராஷ்டிரபதி திரு. என். சஞ்சீவரெட்டி, "ஆந்திராவிலும் தமிழ்நாட்டிலும் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது" என்று வருத்தம் தெரிவித்தார்.

இந்திய ராஷ்டிரபதி நேற்று தமிழ்நாட்டுக்கு வருவதற்கு முன்னர், ஆந்திரப்பிரதேசத்துக்குச் சென்று, புயலினால் இதறுண்ட பகுதிகளைப் பார்த்து மனம்வருந்தினார்.

நேற்றுமாலை சென்னையில் நிருபர்கள் மத்தியில் ராஷ்டிரபதி பேசுகையில், "புயல் நிவாரணவேலைகளைக் கவனிக்க ஆந்திராவிலும் தமிழ்நாட்டிலும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியிலும் பிரஜைகள் கமிட்டிகள் அமைக்கப் படவேண்டும் என்று ஆலோசனை கூறினார்.

"இந்தக் கமிட்டிகளில் டாக்டர்கள், வழக்கறிஞர்கள் போன்று தொழில்நிபுணர்கள் இடம்பெறவேண்டும். அரசியல் அடிப்படையிலில்லாது பொதுநோக்கில், நிவாரண உதவித் திட்டத்தின்கீழ் செலவழிக்கப்படும் பணம் உண்மைத் தேவைகளுக்கு, உரிய இடங்களுக்குச் சென்றடைவதை இக் கமிட்டி கண்காணித்து, உறுதிப்படுத்த வேண்டும்" என்று ராஷ்டிரபதி தெரிவித்தார்.

## தென்னக புயல் அழிவு:

### ஜனதிபதி, பிரதமர் ஆலோசனை

புதுடில்லி, நவ, 27

தென்மாநிலங்களில் ஏற்பட்ட புயல், வெள்ளஅழிவு நிவாரணம்பற்றி ஜனதிபதி திரு. சஞ்சீவரெட்டியும், பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயும் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

நிவாரணப் பணிகளுக்கு மக்கள் பெருமளவில் உதவவேண்டும் என்று திரு. தேசாய் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ)

## 'கண்டனம்ஜனநாயகரீதியில் தெரிவிக்கப்பட வேண்டும்'

### — இந்தோனேஷியா ஜனதிபதி

ஜகார்த்தா, நவ. 27

**"எனது அரசாங்கத்தின் மீது கண்டனங்களைத் தெரிவிப்பவர்கள் ஜனநாயகநெறியின் அடிப்படையில் அவற்றைத் தெரிவிக்கவேண்டும்"**

இவ்வாறு இந்தோனேஷிய ஜனதிபதி திரு. சுஹார்ட்டோ தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷிய அரசாங்கத்திற்கு எதிராக குறிப்பாக மாணவர்களும், இளைஞர்களும் சமீபகாலமாகக் கண்டனக்கணை தொடுத்துவருகின்றனர்.

இதுபற்றி பிரஸ்தாபிக்கையிலேயே ஜனதிபதி மேற்கண்டவாறு கூறினார். (உ)

## 'தேசிய உணர்வுடன் நாட்டு உயர்வுக்காக உழையுங்கள்'

### திருமதி பண்டிட் வேண்டுகோள்

புதுடில்லி, நவ. 27

"சகலரும் தேசிய உணர்வுடன் நாட்டின் உயர்வுக்காக ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்" என்று திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜனதா கட்சி ஊழியர் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே திருமதி பண்டிட் இவ்வேண்டுகோளை விடுத்தார்.

"அரசாங்கத்தின் செயற்திட்டங்கள் பூரணம்பெற வேண்டுமாயின் மக்களின் ஒத்துழைப்புமிக முக்கியமானது" என்றும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார். (உ)

## இந்திய-நேபாள நல்லுறவு:

### புதுடில்லியில் பேச்சுவார்த்தை

புதுடில்லி, நவ. 27

பாரதமும், நேபாளமும் பரஸ்பர நல்லுறவை வளர்த்துக்கொள்ளவிருக்கின்றன.

இந்தவகையில் இருநாட்டு அதிகாரிகளும் புதுடில்லியில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளனர்.

பாரத-நேபாள நல்லுறவை வளர்க்கும் வகையில் பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் டிசம்பர் மாதம் நேபாள விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவிருக்கிறார். (உ)

## பண்ணை அகதி முகாமுக்கு உதவி வழங்கியவர்கள்

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு மாதங்களாக பண்ணை அகதிமுகாமில் இருந்த நாற்றுக்கு மேற்பட்ட அகதிகளுக்கு பலர் பல்வேறு உதவிகளைச் செய்தனர்.

யாழ் மில்க்வைற் அதிபர் திரு. கனகராசா சவர்க்காரம் வழங்கினார். அன்னை கோப்பி நிறுவனம் பற்பொடி வழங்கியது. இன்னத்துரை பிறதர்ஸ் அதிபர் திரு. சின்னத்துரை, வைத்திலிங்கம் கம்பெனி அதிபர் திரு. வைத்திலிங்கம் ஆகியோர் உணவுப் பொருட்கள் வழங்கினர்.

யாழ். லயன்ஸ் கழகமகளிர் மன்றம் முகாமில் தீபாவளி விழா கொண்டாடியது. யாழ். ரோட்டரி கழக மகளிர் மன்றத்தினர் உணவுக் கோப்பைகள் வழங்கினர்.

யாழ். சைவமகளிர்மன்றம் முகாமில் நவராத்திரி விழா கொண்டாடியது. யாழ். லியோகிளப் மதிய உணவு நாடகவிருந்தளித்தது. கொட்டடி பொதுமக்கள்யாழ். வர்த்தகப் பிரமுகர்கள் உணவுப்பொருட்கள் வழங்கினர்செஞ்சிலுவைச் சங்கம் புதிய உடைகள் வழங்கியது. கொக்குவில் முன்னேற்றக்கழகம் பழைய உடைகள் வழங்கியது.

டாக்டர் எஸ். சேனதிராசா, அகதிகள் குடும்பத்திற்கு காணி வழங்கினார். சட்டத்தரணி ஜெகதீசன் சட்ட ஆலோசனை உட்பட பல உதவிகள்செய்தார். 5-வதுஜோர்ஜ் மன்னர் தரும ஸ்தாபனத்தார் யாழ். உதவி அரசாங்க

[4-ம் பக்கம பார்க்க]

## கர்நாடக முதல்வர் விவகாரம்

புதுடில்லி, நவ. 27

கர்நாடக முதலமைச்சர் திரு. தேவராஜ் அரஸின் கட்சிவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு தாம் மேலிடத்தை வற்புறுத்தப்போவதாக கர்நாடக மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. பட்டேல் தெரிவித்துள்ளார். (உ)

## வாஷிங்டனில் ஜப்பான் பிரதி மந்திரி

டோக்கியோ, நவ. 27

அமெரிக்காவுடனான வர்த்தகம் முதலான தொடர்புகளைப் பலப்படுத்தும் வகையிலான பேச்சுவார்த்தைகளின் பொருட்டு ஜப்பானிய பிரதி அமைச்சர் ஒருவர் வாஷிங்டன் சென்றுள்ளார் (உ)

## "சுயதொழில்களை ஆரம்பித்து பொருளாதார்வளம் பெறுவோம்"

### அரச உத்தியோகமோகம் வேண்டாமென்கிறார் வட்டு. எம். பி.

[சங்காணை]

"கடந்தகாலங்களில் எமது இனத்திற்கு ஏற்பட்ட இன்னல்களையும் கவனியாது, எம்மவர்கள் இன்னும் அரச உத்தியோகங்களில் மோகங் கொண்டுவருவது வேதனைக் குரியது. எம் இனத்தை எதிர் நோக்கும் கஷ்டங்களிலிருந்து விடுபட எமது முயற்சியில் சுய தொழில்களை ஆரம்பித்து, பொருளாதாரத்தை வளர்க்க படித்த இளைஞர்கள் முன்வர வேண்டும்"

இவ்வாறு வட்டுக்கோட்டை தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு வட்டுக்கோட்டையில் பால்பண்ணை நிலையம்ஒன்றைத் திறந்துவைத்து பேசுகையில் கூறினார். வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. மு. சுப்பிரமணியம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

வட்டு எம். பி. தொடர்ந்து பேசியதாவது: "எனதுதொகுதியில் ஏழு கிளைகளைக்கொண்ட "வட்டுக்கோட்டை கைத்தொழில் அபிவிருத்திச் சபை" ஒன்றை நிறுவி, அதன் மூலம் தேசவளத்திற் கேற்ப மூலப் பொருள்களைக் கொண்டு கைத்தொழில் நிலையங்களை நிறுவி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பையும் பொருளாதார அபிவிருத்தியையும் பெற உத்தேசித்துள்ளேன். இதற்கு அரச உதவிகிடைக்கும் என்றே அல்லது கிடைக்காதென்றே எண்ணவேண்டியதில்லை. இப் பகுதி மக்களின் ஏகோபித்த ஒத்துழைப்பு கிடைத்தால் எவரிலும் வெற்றிகரமாக இத் திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

தமிழன் தன்மானத்துடன் வாழவேண்டும் என்றுநாம் பிரசாரம் செய்துவரும் இச் சந்தர்ப்பத்தில்; ஆசிரியர் தொழில், இலங்கைவங்கி, மக்கள் வங்கி போன்ற அரச வேலைகளுக்கு ஆர்வம்கொண்டு பலர் நிற்கின்றனர் இப்பேற்பட்ட பதவிகளை பெறுவோர் தாம் பெறும் ஊதியம் தாம் கடமைபுரியும் வெளி இடங்களிலிருந்து சீவியம் நடத்தப் போதுமா என்று சிந்திக்க வேண்டும். இத் தொகுதியிலுள்ள முடிக்குரிய காணிகளில் என்ன என்ன அபிவிருத்தி செய்யவேண்டுமோ அவற்றை எல்லாம் அரசாங்க அதிகாரிகள் மூலம் பெற்றுத்தருவேன் என்று உறுதியளிக்கின்றேன்" என்றார்.

வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம் தமது தலைமை உரையில் 'மேலைநாடுகளின் அபிவிருத்திக்குக் காரணம் அந்தநாடுகளில் உள்ள மூலவளங்களை நன்குபயன்படுத்துவதேதொழிற் சாலைகளை நிறுவிக் காந்தியடிகள் கூறியதுபோல், சமுதாயத்திற்கேற்ப எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்பதால் பலதரப்பட்ட கஷ்டங்களிலிருந்து நாம் விடுபடமுடியும். முக்கியமாக இளைஞர்கள் மேற்கொள்ளும் நன்முயற்சியே எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டியாக அமையும் என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும்' என்றார்.

வட்டுக்கோட்டைத்தொகுதி அபிவிருத்திச் சபையின் திட்டத்திற் கமையவே இப்பாற் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது.

# சர்வோதயமும் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலும்

— வைத்திய கலாநிதி க. சிவஞானரத்தினம் —

எதிர்வரும் ஜனவரியில் வரவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் சர்வோதய முறையை அரசாங்கம் ஏற்குமா? ஏற்கத் தவறினால் நாம் முன்வந்து இம்முறையைக் கைக்கொண்டு சர்வோதயம் என்னும் கட்சியற்ற கட்சியை உண்டாக்கி அதைக் கட்சியாகப் பதிவுசெய்து அதன்முறைப்படி நாம் தேர்தலில்போட்டியிட்டு எங்கள் கிராம மக்கள் எல்லாரையும் வளர்த்து நாமெல்லோரும் ஒருமித்து முன்னேற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இது தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு மாறான இயக்கம் அல்ல. இரண்டும் ஒரே நோக்கத்துடன் இயங்கலாம். அவர்கள் தமிழ் ஈழத்தைப் பெற்றாலும் பெறப் பிந்தினாலும் மக்கள் முன்னேற்றத்தைச் சர்வோதய முறையில் வளர்க்க நாம் உழைக்கவேண்டும். இதற்கு நாடெங்கும் சிறு சிறு சர்வோதய குழுக்கள் உண்டாக்கப்படவேண்டும். விரைவாக இந்த விஷயத்தை எல்லாரும் உணர்ந்து ஆவன செய்யவேண்டும்.

## கட்சி முறையில் உள்ளூராட்சித் தேர்தல்

கட்சி கட்சியாகப் பிரிந்து நின்று போட்டியிட்டு உண்டாக்கப்படும் உள்ளூராட்சி மன்றங்கள் மக்களால் தங்கள் விருப்பப்படி தங்களால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் கலைக்கொண்ட உள்ளூராட்சி மன்றங்களைப்போல ஜனநாயக அடிப்படையில் சிறந்ததாக மாட்டாது.

## கட்சித்தெரிவு ஜனநாயகமுறையா?

கட்சிகளின் மத்திய குழு மக்களால் தெரிவுசெய்யப்பட்டதல்ல. ஒருசில பிரபலஸ்தர்களால் உண்டாக்கப்பட்ட கட்சிகள் அத்தேசத்தின் மக்களின் தொகையிலும் பார்க்க மிகமிகச் சிறிய தொகையினவே அரசாங்க பேரவைக்கோ உள்ளூராட்சி மன்றங்களுக்கோ தெரிவுசெய்யப்போகும் கட்சியின் மிகமிகச் சிறிய மத்திய குழுவோ உள்ளூராட்சிப் பகுதி மத்திய குழுவோ ஒருகாலமும் மக்களின் ஜனநாயகமுறைப்படி பிரதிநிதிகள் ஆகமாட்டார்.

## அதிகார துஷ்பிரயோகமற்ற ஒத்துழைப்பு

எல்லா அங்கத்தவர்களும் சேர்ந்து ஒருமித்துச் சங்க அலுவல்களை ஏகமனதாக கொண்டு நடத்தக்கூடிய ஒரு நன்முறையை அமைச்சர் திரு. ஆர். பிரேமதாஸ கொண்டு வந்ததற்கு நன்றிசெலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆனால் இந்த முறை சில தீமைகளையும் கட்சிபேதமாக காலகதியில் உண்டாக்கக்கூடும், ஆனபடியினால் அதை மாற்ற முன்வரவேண்டும்.

## சிறந்த தலைவர்களை வளர்த்தெடுத்தல்

பேரவைத் தலைவர்களோ, அமைச்சர்களோ, அங்கத்தவர்களோ உள்ளூராட்சி அரசியல் முறையில் பயின்றவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் சிறந்தவர்கள் ஆவார்கள். இப்படியாகப் பெரும் அரசியல் வாதிகளை உள்ளூராட்சி மூலமாகப் பழக்கி எடுக்கவேண்டும். அதற்காக உள்ளூராட்சி அரசியலில் சேரும் பொழுதே கீழ்க் கூறப்படும் குணங்கள் எல்லாம் உள்ளவர்களா என்று தீர்மானித்தல் நன்று.

1. அவர்கள் ஒவ்வொரு வரும் அந்தந்த பிரதேசப் பிரஜையாகவே இருத்தல் வேண்டாம்.
2. தாமாகவே உழைத்து வாழும் நேர்மையும் ஒழுக்கமுமுள்ளவர்களாகவும் மக்களால் மதிக்கப்பட்ட நற்குணநற்செய்கையுடையவர்களாகவும் நீதி தவறிச் சிறை செல்லாதவர்களாகவும் இருத்தல்வேண்டும்.
3. நாட்டுக்குச் சேவை செய்யக்கூடிய மனமும் வசதிகளும் அவகாசமும் உள்ளவர்களாகவும் முன்னும் இவ்விதமான மக்கள் சேவைகளில் தங்கள் ஆற்றல் உள்ளங்களைப் பல முறை வெளிக்காட்டியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

கட்சி விரோதங்கள் எங்கும் உள்ளன என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. ஆனபடியால் இதனால் ஏற்படும் கஷ்டநஷ்டங்களுக்கு இரையாகக்கூடாது. தப்பக்கூடிய வழி ஒன்றைத் தேடவேண்டும். அப்படித் தேடினால் அதுவே சர்வோதயம். அரசாங்கம் ஒரு கட்சியாகவும் உள்ளூராட்சி மன்றங்கள் வேறுகட்சிகளாகவும் இருந்து நடைமுறையில் முன்னேறுவது அசாத்தியமாகும். அரசாங்கக்கட்சியில் எல்லா உள்ளூராட்சி மன்றங்களும் வரும் என்று நம்பமுடியாது. எனவே உள்ளூராட்சி மன்றங்கள் ஒரு காலமும் ஒரு கட்சிச்சார்பும் இல்லாதனவாக இருத்தல் வேண்டும்.

## அரசாங்கமும் உள்ளூராட்சி மன்றங்களும்

அரசுக்கும் உள்ளூராட்சிமன்றங்களுக்கும்நெருங்கிய-இன்றியமையாத ஒற்றுமையும் ஆதரவும் எக்காலமும் வளர்ந்து கொண்டுவரவேண்டும் இதற்கு ஒருதடையும்ஏற்படக்கூடாது. அரசு எந்தக்கட்சியாக இருந்தாலும் உள்ளூராட்சிமன்றப் பிரதிநிதிகளைத் தெரிந்து அவர்களில் சிலரைத்தங்களுடைய பிரதிநிதிகளாக்க அவர்களுக்குப் போதியபலம் இருத்தல் வேண்டும். அப்படிப்பெற்ற பெலத்தையும் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் பாவித்து அரசைத் தாங்கவும் அரசின் சில சலுகைகளைப்பெறவும் ஒரு காலமும் ஏதாவது தடை ஏற்படக்கூடாது, இப்படியாக அரசஐக்கியத்தால் நாடு முழுவதும் உண்மையான பலவித முன்னேற்றங்காண ஊக்கம் அளித்தல்வேண்டும்.

கட்சிசார்பற்ற (சர்வோதய) உள்ளூராட்சிகள் இவற்றை எப்படி உண்டாக்கலாம்? ஒவ்வொரு தொகுதியையும் தங்கள் ஒத்துழைப்பால் வளர்ந்தெடுக்கக்கூடிய பகுதிகளாகப் பிரித்தல்வேண்டும். அப்படிப் பிரிக்கும்போது வசதியாக வாக்குச்சீட்டு இடாப்புமுறைப்படி அல்லது அரிசிப்பங்கீட்டுப் புத்தக இடாப்புமுறைப்படி அடுத்தடுத்த சிறு ஐம்பது வீடுகள் அல்லது நூறு வாக்காளர் வரையில் உள்ள பகுதிகளாகப் பிரித்தல்வேண்டும். சீன நாட்டில்போல கொம்யூன் குழுக்களை உண்டாகி அவை தாங்களாகவே இயங்கச் செய்வதன் மூலம் நாட்டு முன்னேற்றம் கிராமப் பகுதிகளிலும் வளரச் செய்யலாம். இதற்காகப் பாடுபடும் ஒவ்வொரு பகுதிக்கும் தலைவர்களாக 3 ம் பந்தியில் மேலே கூறப்பட்ட குணங்கள் எல்லாம் பொருந்தியவர்கள் யார் யாரென்று தெரிதல்வேண்டும். அப்படியாகத் தெரிந்து எடுத்தவர்களுக்குள் ஒருவரைத் திருவுளச்சீட்டுப்போட்டு அந்த வருடத் தலைவராகத் தெரிவு செய்தல்வேண்டும். திருவுளச்சீட்டுமுறை கட்சி சாதி, சமயப் பேதமற்ற நிலையைக் காத்துக்கொள்ளக்கூடிய ஒரு சிறந்தமுறை. இதில் தெரிந்து எடுக்கப்பட்டவர்கள் எல்லாரும் குணசாலிகளாக இருப்பதால் திருவுளச்சீட்டு முறையில் பாதகம் ஏற்படமாட்டாது. ஒவ்வொரு தலைவரும் தம்முடன் ஒத்துழைத்துத் தமது பகுதியைத் திருத்துவதற்கு ஒவ்வொரு நாலு ஐந்து வீடுகளுக்கும் ஒரு பிரதிநிதியை நியமித்து அவர் மூலமாகத் தமது பகுதியைத் திட்டமிட்டுத் திருத்துதல்வேண்டும். இதற்கு அரசின் ஒத்துழைப்பும் அவசியம். இப்படித் தெரிவு செய்யப்பட்டவர்கள் பலர் ஒரு குழுவில் இருந்தால் அவர்கள் எல்லாருக்கும் தலைவர்களாக இருப்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்தல்வேண்டும். அதற்காக ஒரு தலைவரை ஒரு வருட காலத்துக்குமாத்திரம் அப்பகுதிக்குத் தலைவராகவும் அதன்பின் நிர்வாகசபை அங்கத்தவராகவும் நியமித்தல் வேண்டும். இந்த நிர்வாகக் குழு ஒரு வாரத்தில் ஒரு முறையாவது சந்தித்துத் தங்களுக்குள் உள்ள குறைபாடுகளைப் பற்றியும் அவைகளைத் திருத்துவதற்கு ஏற்ற வழிவகைகளையும் ஆராய்ந்து அந்தந்த உள்ளூராட்சி மன்றத்துடனும் அரசாங்க உப அதிபர்களுடனும் ஆலோசித்து ஒவ்வொரு வாரமும் திருத்தங்களை மக்களின் ஒத்துழைப்புடன் ஆங்காங்கு வேண்டிய முறைப்படி செய்யவேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தலைவர், அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும்பொழுது இந்தக்குழு அவ்வப்பரப்பில் உள்ளவர்களுக்குள் சிறந்தவர்களாக நாற்பது ஐம்பதுபேரைத் தெரிந்து அவர்களுக்குள் திருவுளச் சீட்டுப் போட்டு அந்தச் சபைக்குத் தேவையானவர்களைத் தெரிவு செய்வார்கள்.

இப்படித் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குள் ஒரு தலைவரையும் உப தலைவரையும் தெரிவு செய்யும் நோக்கமாக மக்களின் வாக்கெடுக்கப்பட்டு ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்றவர் தலைவராகவும் அடுத்தவர் உப தலைவராகவும் தெரிவு செய்யப்படுவார்கள். இந்த முறையிலும் சாதி சமய கட்சி பேதங்கள் தலைதூக்கமாட்டாது. உண்மையாக நல்லவர்களே தெரிவு செய்யப்படுவார்கள். அவர்கள் படிப்படியாகப் பழகி பின் ஆட்சிமன்றத்துக்கும் போகக்கூடியவர்களாவார்கள்.

இப்படியாகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிசபை அங்கத்தவர்களுக்குத் தேவையான சட்ட விதிகளைப் போதித்து அவர்களை இணக்கசபை அங்கத்தவர்களாகவும் அதற்குள் சிறந்தவர்களைச் சமாதான நீதவான்களாகவும் நியமிப்பின் பெரும் நன்மை உண்டாகும்.

---

## முதலிடம்

[யாழ்ப்பாணம்]

1977-ல் கல்வியமைச்சினால் வட்டார ரீதியில் நடைபெற்ற பாடசாலைகளுக்கான சங்கீத, நடன, நாடகப் போட்டிகளில் யாழ். வட்டாரத்தைச்சேர்ந்த சன்மார்க்க மகாவித்தியாலய மாணவர்கள், கனிஷ்ட பிரிவில் கிராமியப் பாடலில் முதலாம் இடத்தையும், கர்நாடக சங்கீதத்தில் கனிஷ்டபிரிவில் முதலாம் இடத்தையும் பெற்று, மாவட்ட ரீதியில் நடைபெற்ற மேற்படி போட்டிகளிலும் கனிஷ்ட பிரிவில் கிராமியப் பாடலில் முதலாம் இடத்தையும், கர்நாடக சங்கீதத்தில் கனிஷ்ட பிரிவில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

## தபால் ஊழியர் வெற்றி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை தபால் கந்தோர் ஊழியர்க்கும், காங்கேசன்துறை பட்டினசபை ஊழியர்க்கும் இடையே நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் தபால்கந்தோர் ஊழியர் 2-1 கோலால் வென்றனர்.

காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கே. தனபாலசிங்கம் மத்தியஸ்தம்வகித்தார். (உ)

(யாழ்ப்பாணம்)

"இரு இனங்களுக்கிடையில் தேசிய ஐக்கியம் உருவாக்குவதற்கு முன்னின்று உழைத்தவர் அமரர் திருச்செல்வம். என்னை ஒரு சிங்கள மகன் என்று பல தமிழர்கள் எடுத்துக்கூறியபோதும், தனது காரியாலயத்தில் சேவையாற்றும் வாய்ப்பை ஏற்படுத்திக்

## புதிய மகளிர் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை, மகளிர் கல்லூரியாக மாற்றப்படவுள்ளது. இதற்காக அரசின் 75,000 ரூபாய் செலவில் விஞ்ஞான ஆய்வுகூடமும் மனையியல் கூடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் இங்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

—

## பண்ணை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர், சமூகசேவை இலாகா அத்தியட்சகர் திரு. கெங்காதரன், வணபிதா ஜே. ஜே. ஞானப்பிரகாசம் ஆகியோரும் உதவிபுரிந்துள்ளார்கள்.

செஞ்சிலுவைச் சங்கம் உட்பட உதவிவழங்கிய சகலருக்கும் பண்ணை அகதிமுகாம் பொறுப்பாளர் சகோதரர் பாலகிருஷ்ணர் நன்றி தெரிவித்துள்ளார்.

## "இனத்தின் விடுதலைக்காக வாழ்வை அர்ப்பணித்தார்"

— ஹேபட் ஜெயவர்த்தனா

கொடுத்த பெருமகனார் அவர்" என, நல்லூர் கல்யாணமண்டபத்தில் நடைபெற்ற அமரர் திருச்செல்வத்தின் முதலாவது ஆண்டு நினைவாஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமரின் சகோதரரான திரு. ஹேபட் ஜெயவர்த்தனா கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அமரர் தனது இறுதிக் காலத்தை தனது தேசிய இனத்தின் விடுதலைக்குப் பாடுபட்டு வெற்றிகண்டவர். இறப்பதற்கு இரு தினங்களுக்கு முன்னர்கூட இந்த உண்மையை என்னிடம் வெளிக்காட்டினார்.

யாழ். வளாகத் தலைவர், பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேசுகையில் "தமிழ் தேசிய இனத்துக்கு இறைமையான தமிழ்ஈழத்தை மீட்டுக் கொடுப்பதற்கு வாழ்நாள் பூராவும் அர்ப்பணித்து தமிழ்ஈழம் என்கிற அவருடைய இலட்சியம் நிறைவு பெறமுன்னர் தமிழ்மக்களை விட்டுச்சென்றது துரதிர்ஷ்டமே" என்றார்.

மாதர்பேரவைத் தலைவி, திருமதிமங்கையர்க்கரசிஅமிர்தலிங்கம்பேசுகையில், "அமரரை தமிழினம் தனக்கு வாயில் வந்ததையெல்லாம் திட்டி வசைபாடிய காலமும் ஒன்றுண்டு இன்று அந்தப் பெருமகனார்தான், உலகஅரங்கில், தமிழன் கோலோடும் முடியோடும் இலங்கையை ஆண்டான் என்ற சரித்திர வரலாற்றை விளக்கி, நீதிமன்றச் சட்டத்தால் நிலைநிறுத்திச் சென்றுள்ளார்" என்றார்.

கொழும்பு தமிழர் விடுதலைக் கூட்டணி கிளைத் தலைவர் ஈழவேந்தன் பேசுகையில், தமிழர்கள் அஞ்சியஞ்சி வாழ்கின்ற நிலையை விடுத்து வீர வாழ்வு வாழ வழிவகுத்தவர் அமரர் திருச்செல்வம். அவர் ஒரு சாதாரண தலைவனல்ல நல்விருந்துக்கும், சொல்விருந்துக்கும் இணையற்றவர் என பல வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் தூதுவர்களும், பாராட்டியுள்ளனர் என்றார்.

இக்கூட்டத்தில் அதிவந் ஆயர் குலேந்திரன், மானிப்பாய் தேசியப்பேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் திரு. சி. குணராஜா ஆகியோரும் உரையாற்றினர். (கெ)

30 — 11 — 77ல்

திறப்பு விழா

வடபகுதி விவசாயிகளுக்கும்

பாவனையாளர்களுக்கும் ஓர் வரப்பிரசாதம்!

சகலவிதமான

- உரப் பசளைகள்
- கிருமிநாசினிகள்
- வீட்டுப்பாவனைப் பொருட்கள்
- கால்நடைஉணவு
- கோழித்தீன்
- சாய்ப்புச் சமான்
- மளிகைச் சாமான்

அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள விஜயஞ் செய்யுங்கள்

எஸ். பி. சாமி அன் கோ.

193, மின்சாரநிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

Regal (Jaffna)
Daily at 4-45 7 & 9-30 P. M. only
LEX BARKER in
Fury Of The Sabers
[Color Scope]

கடைசி வாரம்
ராணி (வாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காட்சி 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

RIO (Jaffna) Daily 10-30 4-45 7-15&9-45 P. M.
THE RAILWAY CHILDREN
(Wonderful Family Entertainment)
Special school shows at 1-30 P. M. by prior arrangement.

ஸ்ரீதர் (வாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
தாயைக் காத்த தனயன்
(புதிய பிரதி)

8-வது ஜனத்திரள் வாரம்!
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
ராஜா (யாழ்நகர்)
ஜெமினி, ஜெயசித்திரா நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
(யாழ்.நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி.... பானுமதி....
பாலையா.... தங்கவேலு....
நடித்த
அம்பிகாபதி

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ★ ஸ்ரீதேவி
★ ஓய். விஜயா அனுபமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
மூன்று முடிச்சு
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. பாலசந்தர்.

மீண்டும்
வடமாகாண
கல்வி அதிபதியாக
மாணிக்கவாசகர்

வடமாநிலக் கல்வி அதிபதியாக திரு. தில்லைநாதன் மாணிக்கவாசகர் இம்மாதம் 23 ம் திகதி வடமாநிலக் கல்வித் திணைக்களத்திற் கடமை ஏற்றுக்கொண்டார்.

அன்று காலையில் நல்லூர்க் கந்தசுவாமிகோயிலில் விசேட பிரார்த்தனையில் ஈடுபட்ட பின்னர் கல்வித் திணைக்களத் திற் பிரசன்னமாயிருந்த திரு. மாணிக்கவாசகருக்கு இலங் தைத் தமிழர் ஆசிரியர் சங் கத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ந. பாலசுப்பிரமணியம், சி சிவபாலசிங்கம், தேசிய ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த திருவாளர்கள் வ. கிருஷ்ண பிள்ளை, எம். குமாரசாமி, அதிபர்கள் சங்கத்தைச் சேர்ந்த பண்டிதர் வி. வ. நல்ல தம்பி உட்படப் பல ஆசிரிய தொழிற்சங்கவாதிகள் தமது வாழ்த்துக்களை நேரிற் தெரி வித்தனர். இலங்கை ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த திரு. எஸ். கே. சுந்தரலிங்கம் உட் படப் பல பிரமுகர்கள் வாழ்த் துச் செய்திகளை அனுப்பிவைத் திருந்தனர்.

16-6-43 ல் இடைக்காடு மகாவித்தியாலயத்தில் ஆசிரி யராகப் பணியாற்றத் தொட ங்கிய திரு. மாணிக்கவாசகர் 1-11-50 ல் வித்தியாதரிசியா கப் பல உயர் பதவிகளை வகி த்து 1-12-72 ல் வடமாநிலக் கல்வி அதிபதியானார். தொடர்ந்து பரீட்சைத் திணைக் களத்தில் உயர் அதிகாரியாக வும் பெருக்குப்பிராந்தியக் கல்வி அதிபதியாகவும் பணிபுரிந்து புதிய அரசாங்கத்தில் கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாக நியமிக் கப்பட்டார்.

சமய சமூக கலாச்சார இயக் கங்களில் மிகவும் ஈடுபாடு டைய கல்வி அதிபதி பிரமஸ்ரீ கி. இலக்ஷ்மணஐயரை குறித்த தமிழ்ப் பிரிவுக்குப் பொறுப் பதிகாரியாய் இப்பொழுது நியமித்த கல்வி அமைச்சு 23-11-77 தொடக்கம் திரு. மாணிக்கவாசகரை வட மாநிலக் கல்வி இயக்குநராக மாற்றியுள்ளது.

இலங்கையில் நிரந்தர மாநிலக் கல்வி அதிபதியாகக் கடமையாற்றிக்கொண்டிருப்ப வர்களில் திரு. மாணிக்கவாச கர் தமிழர் சமூகத்தில் ஒருவர் மட்டுமே என்பது குறிப்பிடத் தக்கது. (அ

## விலைக்கட்டுப்பாடு - பதுக்கல்

# கைதாவோர் நீதிபதி முன் ஆஜர் செய்யப்படுவர்

(யாழ்ப்பாணம்)

விலைக்கட்டுப்பாட்டுச் சட் டத்தை மீறுவோர், பதுக்கல் காரர் ஆகியோருக்கு பொலி சார் இனிமேல் பிணை வழங்க மாட்டார்கள், இதற்கான உத் தரவைப் பொலிஸ்மா அதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயகா சகல பொலிஸ் நிலையங்களுக் கும் பிறப்பித்துள்ளார்.

இக் குற்றச்சாட்டின்பேரில் கைதாகும் வரித்தகர்களை நீதி பதி முன் ஆஜர்செய்து அவர் களை ரிமாண்டில் வைக்குமாறு கோருமாறு பொலிஸ்மா அதி பர் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரிகளைப் பணித்துள்ளார்

இக்குற்றச்சாட்டின் பேரில் முன்னர் கைதானவர்களுக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

## பத்து நாட்களுக்குள்

# வெங்காயம், கருவாடு, மிளகாய் விநியோகம்

## அமைச்சர் தகவல்

(தொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி துரிதப்படுத்தப்பட்டுவருகி றது.

இன்னவெங்காயம், கருவாடு, மிளகாய் ஆகியவற்றின் ஒரு பகுதி விரைவில் இலங்கை வந்து சேரவிருக்கிறது என்றும் 10 நாட்களுக்குள் இவை விநி யோகம் செய்யப்படும்என்றும் வர்த்தக மந்திரி திரு. லலித் அத்துலத் முதலி இன்று தெரி வித்தார்.

இவற்றின் இறக்குமதியைத் துரிதப்படுத்தும்வகையில் கூட் டுறவு மொத்தவிற்பனவு ஸ்தா பன அதிகாரி ஒருவர் பாரதம் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

செயற்கைத் தட்டுப் பாட்டை ஏற்படுத்தும் வர்த்த கர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார். (உ)

## தொழும்பு - மட்டுநகர்

# ரயில்பாதை கல்முனைவரை விஸ்தரிக்கப்படும்

(மட்டக்களப்பு)

தொழும்பு - மட்டக்களப்பு ரயில் பாதை கல்முனைவரை விஸ்தரிக்கப்படும்.

போக்குவரத்து அமைச்சர் ஜனூப் எம். எச். முகமட் இத் தகவலை மட்டக்களப்பில் தெரி வித்தார்.

இழக்கு மாகாணத்தில் உத்தி யோகபூர்வ விஜயத்தை மேற் கொண்ட ஜனூப் முகமட் மட் டக்களப்பு செயலகத்தில் பேசுகையிலேயே மேற்கண்ட வாறு கூறினார்.

மாத்தளையிலிருந்து கதிர் காமம் வரை ரயில்பாதை விஸ் தரிக்கும் வேலைகள் முடிவுற்ற தும் மட்டக்களப்பு-கல்முனை ரயில்பாதை விஸ்தரிப்பு வேலை கள் மேற்கொள்ளப்படும் என் றும் ஜனூப் முகமட் தெரிவித் தார்.

### ரயில் நிலையம் நவீனமயமாகும்

விரைவில் மட்டக்களப்பு ரயில் நிலையம் சகலவசதிகளு டனும் கூடிய நவீன ரயில் நிலை யமாக கட்டப்படும் என்றும் அவர் கூறினார். (இ)

—

# இந்து மகளிர் சாதனை ஏற்படுத்தியது

(யாழ்ப்பாணம்)

வடமாநில கல்வி வட்டா ரத்திலுள்ள பாடசாலைகளுக் கிடையே நடைபெற்ற ஐ. நா. தின பேச்சு, கட்டுரைப் போட்டியில் முன்று பரிசுகளை யாழ். இந்து மகளிர் பெற்று சாதனையை நிலைநாட்டியுள் ளது.

ஆங்கில பேச்சுப்போட்டி யில் முதலாம் இடத்தை செல்வி சுபாஷினி வேலாயுத னும், தமிழ் கட்டுரைப் போட்டியில் 2-ம் இடத்தை செல்வி அருன்மொழி யோக நாதனும், ஆங்கிலக் கட்டு ரைப் போட்டியில் 4-வது இடத்தை செல்வி மஞ்சுளா மூர்த்தியாவும் பெற்றுள்ள னர். (கெ)

4-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி - வைஜெந்திமாலா
பார்த்திபன் கனவு

4-ந் திகதி வரை
புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
ஞாயிறு 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

# திருமலையில் சாயி ஜயந்திவிழா

(திருக்கோணமலை)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 52 வது ஜயந்தி விழா, திருக்கோணமலை சமித் தியினால், சமித்தி மண்டபத் தில் கொண்டாடப்பட்டது.

புலவர் மலை. சோமாஸ்கந் தர் இவ்விழாவிற்குத் தலைமை வகித்தார் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே. சபாநாய கம் பகவானின் புதுமைகளை எடுத்துக் கூறினார். (க. அ)

.....

# யாழ். நகர வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாப்புச்சட்ட விதிகளை மீறுவோர் மீது தொழில் திணைக்களம் வழக்குத் தாக் கல் செய்யவுள்ளது.

யாழ் நகரிலுள்ள சகல வர்த்தக நிறுவனங்களுக்கும், தொழில் திணைக்கள அதிகாரி கள் நேரில் சென்று இந்த எச் சரிக்கையை விடுத்திருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் சாப்புச் சட்டத்தின் வர்த்தகர்கள் மீறிச் செயல்படுகின்றார்கள் என்ற தொழிற்சங்கங்களின் குற்றச்சாட்டை ஏற்று தொழில் திணைக்களம் தீவிர கண்காணிப்பை நடாத்தவுள் ளது. (தெ-அ)

**மனிவாக்கு**

தனது தாய்ப்பாஷை யைச் நிறுமைப்படுத்துவது தன் தாயைத்தூற்றுவதற் குச் சமனுகும்.

—காந்திமகான்

சுழநாடு
The Eelanaadu

## விலை குறைப்பு!

வரவு-செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் திரு. ரெஜி டி.மெல் அறிவித்து அந்தத்திட்டத்தின் மீதான விவாதமும் பேரவையில் நிகழ்ந்து முடிவடையப் போகிறது.

புதிய அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் விலைவாசிகளைக் குறைக்கும், மக்களுக்குப் பெரும் நிவாரணத்தைக் கொடுக்கும் என்று எல்லோருமே எதிர் பார்த்தார்கள்.

அவர்கள் எதிர்பார்த்ததிலும் தவறில்லை; நிதிஅமைச்சரிலும் முற்றுகக் குறை சொல்லமுடியாது.

வியாபார மொத்த விற்பனவு வரியில் நிதிஅமைச்சரி பெரும்பாலும் ஏற்படுத்தியிருக்கிறார். சினியின் விலையும் குறைக்கப்பட்டிருக்கிறது. வரவு-செலவுத் திட்டம் வருவதற்கு முன்னரே கோதுமைமாவின் விலை குறைக்கப்பட்டது.

வியாபார மொத்த விற்பனவு வரி குறைக்கப்பட்டதாலேயே பல பொருள்களின் விலை குறைந்திருக்க வேண்டும்.

ஆனாலும் இவைகளின் விலை எதிர்பார்த்த அளவுக்குக் குறையவில்லை.

உணவுப் பொருள்கள் மற்றும் உற்பத்திப் பொருள்கள் பலவற்றின் வியாபார மொத்த விற்பனவுவரி பெருமளவில் குறைக்கப்பட்டிருக்கின்றது.

உதாரணமாக சொக்கலேட், கேக் மற்றும் பிஸ்கட் முதலிய இனிப்புப்பண்டங்களின் வியாபார மொத்த விற்பனவுவரி இருபத்தைந்து சதவீதத்திலிருந்து ஒருசதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

இதன்படிமட்டுமே பார்த்தாலும் ஒரு ரூத்தல் பத்து ரூபாயாக விற்கப்பட்ட கேக் இப்போது இரண்டு ரூபாயால் குறைக்கப்பட்டிருக்கவேண்டும். இப்படியே இதர இனிப்புப் பண்டங்களின் விலையும் குறைக்கப் பட்டிருக்கவேண்டும்.

சினியின் விலை குறைக்கப் பட்டதாலும் மாவின் விலை குறைந்துள்ளதாலும் இன்னும் கூடுதலாகவே விலை குறைக்கப்பட்டிருக்க வேண்டுமாலும் வியாபார மொத்த விற்பனை வரிக் குறைப்பின்படியாவது பண்டங்களின் விலையைக்குறைத்திருக்கவேண்டும்.

ஒரு சிலர் மட்டும் சிறிதளவு விலைகளைக் குறைத்திருக்கின்றனர். மற்றும் விலைகளைக் குறைத்திருப்பதாக அறிவித்திருக்கின்றனர்.

இந்த விலைக்குறைப்பும்கூட எதிர்பார்த்த அளவுக்கு இல்லை.

உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் இன்னமும் மக்களின் நலன்பற்றி அக்கறைகொள்வதாகத் தெரியவில்லை.

பதுக்கல், கொள்ளை இலாபத்துக்கெதிராகக் கடும்நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அரசு அறிவித்திருக்கிறது.

# "தமிழ்க் கலைத்தூதுமூலம் நற்பணி தொடரட்டும்!"

— தனிநாயகம் அடிகளார்.

## "பாரதிதாசன் கூற்று தீர்க்கதரிசனமாகிவிட்டது"

— ஓவியர் பெனடிக்ற்

[யாழ்ப்பாணம்] கல்வி, கலை, பண்பாடு களைக் காப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள இக்கழகமானது; இக்காலப்பகுதியினருக்கு மட்டுமல்ல, நமதுஎதிர் காலச் சந்ததியினரின் கலை, கலாச்சாரத்தையும் பாதுகாக்க நற்பணியாற்றவேண்டும்".

இவ்வாறு நேற்று முன்தினம் நல்லூர் ஞானசம்பந்த ஆதினத்தில் நடைபெற்ற கல்வி, கலை, கலாச்சாரக் காப்புக் கழகப்பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய வண. பிதா தனிநாயகம் அடிகளார் கூறினார். அவர் தொடர்ந்து தமது உரையில் கூறியதாவது;

"உலகெங்கணும் நம்மவர்களும், நம் கலை, கலாச்சாரப் பண்பாட்டினைப் போற்றுகின்றவர்களுடன் நாம் நட்புறவு கொண்டு நம் கலைச்செல்வங்களை உலகறியச் செய்யவேண்டும்".

இக்கழகம் மூலம் வெளிநாடு செல்கின்ற தூதுக்குழுவினர், இத்தூதை வெறும் கலைத் தூதாகக்கருதாது 'கடல்கடந்த நாடுகளிலும் நம் நற்றமிழ்க் கலைச்செல்வத்தையும், கலாச்சாரப்பண்பாட்டுத் தொடரினையும் ஏற்படுத்துகின்றபண்பாட்டுப் பாலமாக அமைய வேண்டுமென ஆசிபகர்கின்றேன்" என்றார்.

திரு. பி. நடராஜன், இரசிகமணி கனக. செந்திநாதனுக்கு அஞ்சலிஉரைசெலுத்தியதைத் தொடர்ந்து 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இரங்கலுரையில் அவர், "இரசிகமணி, இலக்கியச்செல்வர் அமரர் கனக. செந்திநாதன் தமிழுக்காகவே வாழ்ந்தவர். நாவலரின் வழிவந்தவர் என்று பெருமையோடு கூறிய அவர், மரபுவழிநின்று தமிழுக்குப் புதிய அணி சேர்த்தார். மரபுவழி நின்ற காரணத்தால் புதிய மாற்றங்களை அவர் எதிர்த்து ஒதுக்கிவிடவில்லை. சிறுகதை, புதினம், நலனுய்வு ஆகிய துறைகளில் மற்றையோரை ஊக்கிவந்ததோடு தாமும் அத்துறைகளில் எல்லாம் ஈடுபாடு கொண்டிருந்தார்" என்றார்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய சட்டத்தரணி திரு த. சோமசுந்தரம் தமதுரையில் "மிக அண்மையில் ஓவியர் திரு. பெனடிக் தேசியத்தலைவர்களானதந்தை செல்வா, சட்டமேதை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோரின் திருவுருவப்படங்களை வரைந்து அவற்றை வெளியிட்டு விழா நடாத்தினோம். அதன்மூலம் சிறப்பாகப்பணம் சேரவில்லை. தற்போது திரு. பெனடிக் தனது வெளியுலகக் கலைத்தூதின் மூலம் தனது கலைத்திறனை வெளிக்காட்ட விருக்கின்றார். இதனால் திரு. பெனடிக் ஏதோ தனக்குப் புகழ் சேர்க்கப் போகின்றார் என்பதல்ல. அவர் பெறும் பெயரும், புகழும் பாராட்டுக்களும் நமக்கும், நம் தமிழ்மக்களுக்கும் இந்த நாட்டிற்கும் கிடைக்கின்ற பாராட்டும், பெருமையுமேயாகும்" என்றார்.

கழகச் செயலாளரும், கலைஞருமான திரு. பெனடிக்ற் தமது உரையில் கூறியதாவது;

"1958ல் நான் பாரதிதாசனை ஓவியத்தில் தீட்டினேன். அவர் என்னைக் காவியத்தில் தீட்டினார். அந்தக் காவியத்தில் 'அயல் நாடுகள் எல்லாம் அழைக்கும் ஒன்று நானறிவேன்' எனப் பாடிய அந்த வரிகளில் அவரது தீர்க்கதரிசனத்தைப் இன்று என்னி வியக்கின்றேன்.

"பல பெரிய திட்டங்களை எல்லாம் தன்னகத்தே கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இக்கழகம் தன் பணியினைச் செவ்வனே நிகழ்நிறுத்தும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது.

"தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வந்திருந்த அமெரிக்க அறிஞர் ஒருவரை நான் படம் வரைந்துகாட்டியபோது அவர் 'நீர் எப்படி எனக்கு இந்தக் கலையின்பத்தைக் காட்டினீரோ அப்படியே எனது நாட்டிலும் வந்து காட்டும்" என்று பணித்தார். நாம் இங்கு மேற்கொள்ளும் இத்தூது வெறும் கலைத் தூதாக அமையாது தமிழரின் ஒப்பற்ற கலாச்சாரப் பண்பாட்டை உலகறியச்செய்யும் ஓர் உன்னத பணியாக அமையும்" என்றார்.

இத்தூதுக்குழு வெளிநாட்டுத் தொடர்பு பற்றி ஆலோசனைகள் வழங்கப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர் திருவாளர்கள் த. சோமசுந்தரம், ரி. தம்பித்துரை, எஸ். ஞானப்பிரகாசம், செ. கோடீஸ்வரன், இ. வைத்திலிங்கம்.

(கா)

## புகார்

(நெல்லியடி)

கட்டைவேலி நெல்லியடி ப. தோ. கூ. சங்க எல்லைக்குள் உள்ள பாவனையாளர்களுக்குத் தரங்குறைந்த நெத்தலி கருவாடு வழங்கப்படுவதாக, கரவெட்டி உதவி அரசாங்க அதிபருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

நெத்தலியுடன் பெருமளவில் மண் கலந்திருப்பதால் பாவனைக்குதவாமலிருப்பதாக புகாரில் கூறப்பட்டுள்ளது.

(அ)

## தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலையில் சுமார் 12,000 ரூபா செலவில் விஞ்ஞான கூடமொன்று அமைக்கப்படவிருக்கிறது.

இவ்விஞ்ஞானகூடத்தைவித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் பொறுப்பேற்றுக் கட்டுவதென அதிபர் திரு. பேரம்பலம் தலைமையில்நடந்த பெற்றோர் ஆசிரியர் சங்கக் கமிட்டி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(க-அ)

இதற்கு அரசாங்க அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மட்டுமல்லாது பொது மக்களினதும் பூரண உதவியும் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

## விரக்தியுற்ற வாலிபர் நஞ்சருந்தித் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கையில் விரக்தியுற்ற நிலையில் மனமுடைந்த ஒருவரி சேவையாற்றிய நாவலர் ஆச்சிரமத்தில் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

அரியாலை கலைமகள் வித்தியைச் சேர்ந்த இன்னையா ரஞ்சன் (வயது 24) என்பவரே நஞ்சருந்தியதற்கொலை செய்துகொண்டவராம்.

இவரது மரணம் குறித்து மரணவிசாரணை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கணகரெத்தினத்துக்கு, சாட்சியமளித்த அவரது மாமனார், காலமானவர் நீண்ட நாட்களாக கவலையுற்றிருந்ததாகவும், தாம் எதுவும் கேட்டால் அது பற்றி எதுவும் தெரிவிக்க மறுத்துவிட்டதாகவும் கூறினார்.

சம்பவம் நடைபெற்றஇடத்தில், நச்சுத்திராவகம் வாங்கிய ரசீதும், போத்தலும், நஞ்சருந்தியதற்கான அடையாளங்களும் காணப்பட்டது. பிரேத பரிசோதனையை அடுத்து தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

[கெ]

## வெடி கொளுத்தியவர் ஆஸ்பத்திரியில்

[யாழ்ப்பாணம்]

வைபவமொன்றில் வெடி கட்ட வாலிபர் ஒருவர் முகத்தில் எரிகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இச் சம்பவம் மட்டுவில் பகுதியில்இடம்பெற்றது.

வி. சிவதேவன் (வயது 17) என்ற இளைஞரே இவ்வாறு விபத்துக்குள்ளானவராவார்.

வீட்டிற்கு அருகில் நடந்த வைபவமொன்றில் வெடி கொளுத்திக்கொண்டிருந்த சிவதேவன் தான் கொளுத்தியஒரு வெடி வெடிக்காதிருப்பதைக் கண்டு அதைக் கையிலெடுத்துப் பார்த்த சமயம் அது பலத்த சத்தத்துடன் வெடித்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

[கா-அ]

## விஜயவீர பத்திரிகை

(கொழும்பு)

திரு. ரோகண விஜயவீரா தலைமையிலான ஜனதா விமுத்தி பெரமுனை பத்திரிகையொன்றை ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துவருகிறது. இதற்கென அச்சுக் கூடமொன்றை நிறுவுவதில் ஈடுபட்டுள்ளது.

மருதானையில் கட்சிக் காரியாலயம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுடன் மாவனல்ல, தேகோலே, அனுராதபுரம் மற்றும் பல இடங்களில் பொதுக்கூட்டங்களை நடத்தவும் பெரமுனை ஏற்பாடு செய்துள்ளது.

(க-அ)

## எகிப்திய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டில் சிரியா, அல்ஜீரியா, தென் யேமன், பாலஸ்தீன விடுதலை முன்னணி ஆகியவை கலந்து கொள்கின்றன. இந்த உச்சி மகாநாடு எதிர்வரும் வியாழக் கிழமை நடைபெறும் என்று சிரியா இன்று அறிவித்தது.

இதே நேரத்தில், கெய்ரோ மகாநாட்டை திட்டமிட்டபடி கூட்டியே தீருவேன் என்றும், இஸ்ரேல் மட்டும் கலந்து கொண்டாலும் இம்மாநாடு நடைபெறும் என்றும் அதிபர் அன்வர் சதாத் இன்று அறிவித்துள்ளார்.

## இன...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்த திட்டத்தை வரவேற்று தமிழர் இங்களும், இங்களவர் தமிழும் கற்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## நாடும் நடப்பும்

மட்டக்களப்பிலிருந்து கல்முனை வரை ரயில் பாதை அமைக்கப்படுமென்று போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது மட்டக்களப்பில் தெரிவித்திருக்கிறார்.

கல்முனை வரையில் சேவையை நீடிக்கவேண்டுமென்பது நீண்டகாலக் கோரிக்கையாகும்.

இந்தப் பணியை திறைவேற்றி முடித்தால் மட்டக்களப்புப் பகுதி மக்கள் என்றுமே நன்றி மறக்கமாட்டார்கள்.

போக்குவரத்து அமைச்சர் பல பகுதிகளுக்கும் நேரில் சென்று போக்குவரத்துச் சேவையிலுள்ள குறைகளைக் அறிந்துவருவது போற்றற்குரியது.

ஆனால் அவர் வாக்குறுதிகள் அளிப்பதில் சிறிது எச்சரிக்கையாக இருப்பது நல்லது!

❦ ❦ ❦

யாழ்ப்பாண நகர வீதிகள் இப்போது போக்குவரத்துக்கு உதவாமல் போய்விட்டது. வீதிகள் அனைத்துமே குண்டும் குளியுமாகக் காட்சியளிக்கின்றன. சிறிய வீதிகள் மட்டுமல்ல, பிரதான வீதிகளுமே இந்த நிலையில்தான் இருக்கின்றன.

வாகனச் சாரதிகள் இப்போது இந்த வீதிகளில் வீதி ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கமுடியாமல் வலம்பக்கம், இடப்பக்கம் என்ற பேதமின்றி குண்டுகளைத் தவிர்த்து வாகனங்களைச் செலுத்துவதிலேயே கவனஞ்செலுத்துகின்றனர். இதனால் எந்த நேரம் எந்த இடத்தில் எப்படியான விபத்துக்கள் ஏற்படுமோ என்று அஞ்சவேண்டியுள்ளது. வீதிகளில் நடந்துசெல்வதுகூட ஆபத்தாக இருக்கிறது.

மழை நின்றதும் குண்டுகுழிகளில் சுற்றாடல் நிரப்பித் தாரைப் பூசி, மண்ணைப் பூசிச் சமாளிப்பார்கள். மீண்டும் மழை விழுந்ததும் பழைய கதைதான்.

கருங்கல் போடுவது சுலபமான காரியமல்லத்தான். ஆனாலும் போக்குவரத்துப் பாதைகள் சீராக இல்லாததும் விலைவாசி உயர்வுக்கு ஒரு காரணமென்பதை மறந்துவிடமுடியாது.

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி, நாகர்கோவில் பகுதிகளில் காங்கிரீட் வீதிகள் அமைக்கப்பட்டிருந்ததைச் சுமார் பதினைந்து இருபது வருடங்களுக்கு முன் பார்த்தேன். இங்கும் சுன்னாகம் பட்டினசபை எல்லைக்குள் காங்கேசன்துறை வீதியில் ஒரு பகுதி காங்கிரீட்டினால் அமைக்கப்பட்டது.

சிறு கற்களைப் போட்டுப் பூசி மெழுகுவரை விடக் காங்கிரீட் வீதிகள் எவ்வளவோ பரவாயில்லை.

போக்குவரத்து அமைச்சும், உள்ளூராட்சி மன்றங்களும் இவை பற்றிச் சிறிது சிந்திப்பது நல்லது!

ஊர்சுற்றி

## கூட்டணி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு என்னும் சிபார்சு செய்யப்பட்டபடி தகுதிக்கும், திறமைக்கும் முக்கியத்துவம் அளித்து சிபார்சு வழங்குவேன்'

இதுவிடயத்தில் இராமிய வேறுபாடு காண்பிக்கப்படமாட்டாது. சகல பிரிவுக்கும் சந்தர்ப்பம் அளிப்பேன் என்று உறுதியளிக்கின்றேன்.

'இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளுக்கான நியமனங்களுக்கு சிபார்சுசெய்யும்படி இதுவரை கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எந்த விதஅழைப்பும் அரசிடமிருந்து அனுப்பப்படவில்லை இச்செய்தி உண்மைக்கு மாறானது என நான் மறுக்கின்றேன்.

(கெ)

இப்பத்திரிகை 'சுழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-த் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as News paper in Sri lanka.